முக்கிய வார்த்தைகள்:
*விதி*
*லைலதுல் கத்ர்*
*பிரார்த்தனை செய்தல் / தொழுதல்*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**13 மார்ச் 2026 / 23 ரமதான் ஹிஜிரி 1447**

## <u>லைலதுல் கத்ர் : ஒரு சிறந்த விதியை நாடுதல்</u>

**الْحَمْدُ لِلَّهِ الَّذِي هَدَانَا لِلْإِسْلَامِ، وَوَفَّقَنَا لِإِدْرَاكِ شَهْرِ الصِّيَامِ وَالْقِيَامِ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ الْمَلِكُ الْعَلَّامُ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ سَيِّدُ الْأَنَامِ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ خَيْرِ مَنْ صَلَّى وَصَامَ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ الْكِرَامِ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللَّهِ، اتَّقُوا اللَّهَ. قَالَ جَلَّ فِي عُلَاهُ: لَيْلَةُ الْقَدْرِ خَيْرٌ مِّنْ أَلْفِ شَهْرٍ ۗ**

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது "தக்வா" [பக்தியை] ஏற்படுத்திக் கொள்வோமாக! அல்லாஹ்வை எவ்வாறு பயந்து கொள்ள வேண்டுமோ அவ்வாறு பயந்து கொள்வோமாக! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுவோமாக! அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வோமாக. இன்று அல்லாஹ்வின் மீது நாம் ஏற்படுத்திக் கொள்ளும் "தக்வா" வானது, நாளை மறுமையில் அல்லாஹ்வின் முன்பாக நாம் நிற்கும் போது நமது அமைதிக்கான ஆதாரமாக அமையட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

ரமதான் மாதத்தின் கடைசி பத்து இரவுகள் நம்மை வந்தடைந்து விட்டன. நாம் முஸ்லிம்கள் எனும் ரீதியில், மிகவும் முக்கியமான அந்த இரவைத் தேடுவது அவசியம் எனவும், அந்த இரவு ஆயிரம் மாதங்களை விடச் சிறந்த இரவு எனவும், அதுதான் **லைலதுல் கத்ர்** இரவு எனவும் நம்புகிறோம்.

இமாம் முஸ்லிம் [ரஹ்] அவர்கள் பதிவு செய்து அறிவிக்கும் ஒரு ஹதீதில், இறைத்தூதர்[ஸல்] அவர்கள், மற்ற எல்லாக் காலங்களை விட ரமதான் மாதத்தின் கடைசி பகுதியில் தான், வணக்க வழிபாடுகளில் அதிகமாக ஈடுபட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. நம்மிடமும் இது போன்ற சிந்தனை ஏற்படுவது அவசியமல்லவா?

மேலும், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அத்-துகான்" எனும் அத்தியாயத்தின் 4-வது வசனத்தில் கூறுகிறான்:

فِيهَا يُفْرَقُ كُلُّ أَمْرٍ حَكِيمٍ ﴿٤﴾

பொருள்: "அதில் [அந்த இரவில்] முக்கியமான ஒவ்வொரு விஷயமும் தீர்மானிக்கப்படுகிறது"

சகோதரர்களே! தற்போது ஓதப்பட்ட வசனத்தில் காணப்படும் "அதில் [அந்த இரவில்] முக்கியமான ஒவ்வொரு விஷயமும் தீர்மானிக்கப்படுகிறது" என்பதற்கு, இமாம் இப்னு கஸீர் [ரஹ்] அவர்கள் விளக்கமளிக்கையில்: வாழ்வாதாரம், வரும் ஆண்டில் நடைபெறும் சோதனைகள், நிகழ்ச்சிகள் ஆகிய அனைத்தும் **லைலதுல் கத்ர்** இரவில் அல்லாஹ்வினால் தீர்மானிக்கப்படுகின்றன; வாழ்வாதாரத்தை அல்லாஹ் பகிர்ந்தளிக்கின்றான் எனத் தெரிவித்துள்ளார்கள்.

**அன்பிற்குரிய சகோதரர்களே**!

நிச்சயமாக, ஒரு ஓரிறை நம்பிக்கையாளர் [முஃமின்] **லைலத்துல் கத்ர்** இரவில் உள்ள மகத்தான விஷயங்களையும், குறிப்பாக, அப்புனிதமிக்க

இரவில் நமது **விதியை** அல்லாஹ் தீர்மானிக்கின்றான் என்பதையும் சாதாரணமானவையாகக் கருதமாட்டார். அதில் விழிப்புணர்வுடன் காணப்படுவார். இந்நிலையில், நாம் என்ன செய்ய வேண்டும்? எனும் கேள்வி இங்கு எழுகிறது.

இக்கேள்விக்கானப் பதிலை, இறைத்தூதர்[ஸல்] அவர்கள் பின்வரும் ஹதீதில் நவின்றுள்ள கருத்துக்களில் காணலாம்:
"இறைவனால் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டளையை, **விதியை, "துஆ" [பிரார்த்தனையால்]** தவிர வேறு எவ்விஷயத்தாலும் மாற்ற முடியாது" [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் இப்னுமாஜா ரஹ்]

எனவே, ரமதான் மாதத்தின் மீதமுள்ள இரவுகளை, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிடம் அதிகமாகப் **பிரார்த்தனை** புரிவதற்காகப் பயன்படுத்திக் கொள்வோமாக. நாம் அல்லாஹ்விடம் பல **பிரார்த்தனைகளைச்** செய்யலாம்; எனினும், இன்றைய "குத்பா" பிரசங்கமானது, இப்புனிதமிக்க நேரத்தில் இரண்டு முக்கிய விஷயங்களை அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்ளுமாறு பரிந்துரை செய்கிறது:

**முதலாவதாக: நமக்கு ஏற்படும் சோதனைகளுக்கு, அல்லாஹ் விரும்பும் வகையில் பதிலளிப்பதற்கான ஆற்றலை நமக்கு வழங்குமாறு வேண்டிக் கொள்வது**

நாம் முஸ்லிம்கள் எனும் ரீதியில், இவ்வுலக வாழ்க்கையானது ஒரு சோதனையாகும் என அறிந்துள்ளோம். எனவே, அல்லாஹ் நமக்கு **விதியாக** ஏற்படுத்தும் ஒவ்வொரு சோதனையையும் பொறுமை, அறிவாற்றல், மற்றும் அல்லாஹ்வின் பக்கம் நம்மை நெருக்கமாக்கி வைக்கும் தன்மைகள் ஆகியவற்றால் எதிர்கொள்ளும் ஆற்றலை எங்களுக்கு வழங்குவாயாக! என அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்ள வேண்டும்.

**இரண்டாவதாக: நமது வாழ்க்கை, அல்லாஹ்வுக்கு அடிபணிதல் மற்றும் மன்னிக்கும் மனப்பான்மையால் நிரப்பமாகக் காணப்பட வேண்டும்**

அல்லாஹ் நமக்கு நீண்ட நாட்கள் வாழும் பாக்கியத்தைக் கொடுத்தால், யா அல்லாஹ்! எங்கள் வாழ்க்கையை பணிவு, உனக்கு அடிபணிந்து நடத்தல் ஆகியவற்றால் நிரப்பமானதாகவும், பாவங்களை நினைத்து வருந்துவதற்கான வாய்ப்புகளால் நிரப்பமானதாகவும் ஆக்குவாயாக எனவும், ரமதான் மாதத்தை மீண்டும் அடையக் கூடியப் பாக்கியத்தைத் தந்தருள்வாயாக எனவும் அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்ள வேண்டும். நமக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள தவணைக் காலம் முடிந்து விட வாய்ப்புள்ளது என நாம் அறிந்தால், யா அல்லாஹ்! எங்களுக்கு *"ஹுஸ்னுல் காதிமா"* வை அதாவது, நீ விரும்பும் வகையில் சிறந்த முடிவை எங்களுக்கு வழங்குவாயாக! என வேண்டிக் கொள்ள வேண்டும்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே**!

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:

"எவரொருவர், **லைலதுல் கத்ர்** இரவில், "ஈமான்" [ஓரிறை நம்பிக்கையுடனும்] அல்லாஹ்வின் வெகுமதியை எதிர்பார்த்தும் **தொழுகிறாரோ** அவரது கடந்த காலப் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும்" [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்]

**லைலதுல் கத்ர்** இரவை அடையக் கூடிய வாய்ப்பை நாம் வழங்கப்பட்டால், நம்மில் பலர் பல நோக்கங்களுக்காக அதனைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிப்பார்கள். அவர்களில் சிலர், அந்த இரவு முழுவதும் வணக்கத்தில் ஈடுபடுவார்கள்; சிலர், பள்ளியில் "இஃதிகாஃப்" இருப்பது, பிரார்த்தனைகளைச் செய்தல், திருக்குர்ஆனை ஓதுதல் ஆகியவற்றில் ஈடுபடுவார்கள்.

எனினும், நம்மில் சிலர், பலவிதமானச் சவால்களை எதிர்கொள்பவர்களும் இருக்கின்றார்கள். சிலர் இரவு நேரங்களில் வேலை செய்பவர்களாகவும், சிலர் தமது பச்சிளஞ் குழந்தைகளை, வயது முதிர்ந்த பெற்றோர்களைக் கண்காணிக்க வேண்டிய நிலையிலும் இருக்கின்றார்கள். சிலர், அடுத்த நாளில் வேலைக்குச் செல்பவர்களாகவும் கல்விசாலைகளுக்குச்

செல்பவர்களாகவும் இருப்பதால், ஓய்வெடுக்க வேண்டிய நிலையிலும் இருக்கின்றார்கள்.

இப்படிப்பட்டவர்கள், நம்மால் எல்லாக் கடமைகளையும் நிறைவேற்ற முடியாது எனக் கூறி, எல்லா வணக்க வழிபாடுகளையும் புறக்கணித்து விடக் கூடாது;, சின்னஞ் சிறிய வாய்ப்புகளாகிய, தொழுகைகளை ஜமாஅத்துடன் தொழுதல், அல்லாஹ்வை நினைவுகூர்ந்து "திக்ரு" செய்தல், திருக்குர்ஆனை ஓதுதல் அல்லது ஓதப்படுவதைக் கேட்பது ஆகியவற்றில் ஈடுபடலாம். ஒவ்வொரு விஷயத்தையும் அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை நாடியே நிறைவேற்ற வேண்டும். மேலும், **லைலதுல் கத்ர்** இரவு நமது வாழ்க்கையில் நீடித்த, நல்ல தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் எனவும், நமது செயல்களுக்கானப் பட்டியலை நற்காரியங்களால் நிரப்ப வேண்டும் எனவும் அல்லாஹ்விடம் **பிரார்த்தனை** செய்வோமாக!

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**
ரமதான் மாதத்தின் கடைசி தினங்களில் நன்மையை எதிர்பார்த்து, அதற்காக நமது ஆற்றலைச் செலவழித்து, நாம் முயற்சி செய்து வரும் நிலையில், எவ்வித பலனுமளிக்காத அல்லது நிச்சயமற்ற நிலையில் நம்மை ஆழ்த்தி விடுகின்ற விஷயங்களில் நாம் ஈடுபடக் கூடாது. அவ்விஷயங்களில் சில, குழப்பத்தையும் பிரிவினையையும் ஏற்படுத்து பவையாகும்; உதாரணமாக, பிறை பார்த்தல், ஹிஜிரி மாதத்தின் ஆரம்ப நாளைத் தீர்மானித்தல் ஆகியவையாகும்; இவையெல்லாம், வட்டாரங்கள் மற்றும் நாடுகளைப் பொருத்து வித்தியாசப்படும் விஷயங்களாகும். இவை போன்ற விஷயங்களில் விவாதத்தில் ஈடுபடுவதாலும், குறிப்பாக, அவை சரியான கல்வியறிவை அடிப்படையாகக் கொண்டில்லாத போது அவற்றைப் பற்றி விவாதிப்பதாலும் ஏற்படும் எதிர் விளைவுகளில் நாம் சிந்தனை செய்ய வேண்டும். இது போன்ற சர்ச்சைகள் தேவையற்றவை என்பது மட்டுமல்ல, அவை நமது நோன்பின் நன்மைகளைக் குறைத்து விடவும் வாய்ப்புள்ளது.

இது போன்ற விஷயங்களில் கருத்துவேறுபாடுகள் ஏற்படுவது புதிய விஷயமல்ல; இறைத்தூதர்[ஸல்] அவர்களுடைய தோழர்களாகிய

ஸஹாபாக்களின் காலத்திலும் இவை ஏற்பட்டன; இக்கருத்துவேறுபாடுகள், "இஜ்திஹாத்" [ஆய்வு] செய்யும் அறிஞர்கள், இஸ்லாமிய வான சாஸ்திரத்தில் தகுதிபெற்ற, திறன்மிக்க அறிஞர்கள் ஆகியோரிடம் ஏற்பட்டால் அவை இஸ்லாத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. எனவே, நாம் இவற்றில் தர்க்கம் செய்வதோ, ஒருவர் மற்றவரைக் குறை கூறிக் கொள்வதோ, ஏளனமாகப் பேசுவதோ அல்லது மேற்கொண்டு சந்தேகங்களை உருவாக்குவதோ முறையல்ல. இஸ்லாமியப் போதனைகளின் பிரகாரம், இது போன்ற விஷயங்களைத் தெரிந்து கொள்ள, கல்வியறிவுமிக்க நிபுணர்கள், மார்க்கத்தின் நம்பகரமானத் தலைவர்கள் ஆகியவர்களை அணுகுவது அவசியமாகும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமது உள்ளங்களைப் பரிசுத்தமாக்குவானாக! நமது நற்காரியங்களுக்கான நன்மைகளைப் பாதுகாப்பானாக! **லைலதுல் கத்ர்** இரவின் அருள்களை அடைவதற்கான வாய்ப்புகளையும் நமக்கு வழங்குவானாக!

**اللَّهُمَّ بَلِّغْنا لَيلَةَ الْقَدْرِ، وَاجْعَلْ لَنا فِيهَا أَوْفَر الحَظِّ وَالنَّصِيبِ مِنْ رَحْمَتِكَ وَمَغْفِرَتِكَ، وَاجْعَلْها لَنا لَيلَةَ قَبولٍ وَعِتْقٍ مِنَ النَّارِ، وَغُفْرانٍ لِلذُّنوبِ، وَفَوْزٍ بِالْجَنَّةِ.**

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا المُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلَسْطِين وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنا، وَحُزْنَهُمْ فَرَحا، وَهَمَّهُمْ فَرَجا، يَا

رَبِّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.